<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 507/2018 நாள்: 16.04.2026 வா.சா.1 – கார்த்திகேயன்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

1. நான் M.B.A வரை படித்துள்ளேன். நான் கோயம்புத்தூரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். தாவா சொத்தில் குறைவாக பங்கை பிரதிவாதிகள் கொடுத்ததால், நான் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 2002 ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனது மனைவி லஞ்ச ஒழிப்பு துறையில் அரசு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார். 27.01.2006 அன்று நான், எனது தகப்பனார், எனது சகோதரர், எனது சகோதரி ஆகியோர்கள் சேர்ந்து ஒரு பாகபிரிவினை ஆவணம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் சாட்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது மட்டும் தான் படித்து பார்த்தேன் என்று கூறுகிறார்.

2. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தின் 1வது பத்தியில் 12வது வரியில் 2005 ம் ஆண்டு எனக்கு வியாபாரம் சம்பந்தமாக பணம் தேவைப்பட்டதால் நானும், 1 முதல் 3

பிரதிவாதிகளும் கடந்த 27.01.2006 அன்று வா.சா.ஆ.1 ன் படி ஒரு பகுதி சொத்தை பொறுத்து ஒரு பாகபிரிவினை செய்து கொண்டோம் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை ஆவணம் நிபமமானது என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை மூலம் கிடைத்த சொத்தை பொறுத்து நானும், மற்ற பிரதிவாதிகளும் வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். எனக்கு மேற்படி பாகபிரிவினையில் 3 அயிட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். உடுலைபேட்டை, நேரு வீதியில் உள்ள சொத்தை நான் அனுபவித்து வந்து உரிய வரியினங்கள் கட்டி வருகிறேன் என்றால் சரிதான்.

3. 2013 ம் ஆண்டு உடுமலைபேட்டை, விநாயகர் கோவில் சந்து, கதவு எண்.19 ஐ பொறுத்து நான் 1வது பிரதிவாதி எனது தகப்பனார் பெயருக்கு ஒரு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சின்னவீரம்பட்டி கிராமம் க.ச.357/2 ல் உள்ள 7 மனை எண்கள்.12 முதல் 18 ஐ நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். 27.01.2006 ல் ஏற்படுத்தி கொண்ட பாகபிரிவினை ஆவணம் நிபமமான ஆவணமல்ல, அது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம், அதனடிப்படையில் தான் நான் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை கிரையம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் ஏற்கனவே செய்து கொண்ட பாகபிரிவினையின் போது 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு கொடுக்க வேண்டிய பாகத்தை பொறுத்து பின்னாளில்

கொடுப்பதாக நெருங்கிய உறவினர்கள் மற்றும் மூத்த உறவினர்கள் முன்பு சொன்னதாக நான் சொல்லியுள்ளேன், மேற்படி நெருங்கிய மற்றும் மூத்த உறவினர்களின் பெயர்களை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், அவர்கள் எனது பெரியப்பா என்று சாட்சி கூறுகிறார்.

4. 27.01.2006 ல் ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனது பெரியப்பா மற்றும் எனது அத்தை என்று சாட்சி கூறுகிறார். எனது பெரியப்பா தற்போது உயிருடன் இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆன பாகபிரிவினை ஆவணத்தில் பின்னாளில் கூடுதல் பாகம் பிரிக்கப்படும் என்று வாசகம் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை ஆவணத்தில் எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் இருப்பதாகவும், அதை பொறுத்து வேறு பாகபிரிவினை நடைபெறும் என்று சொல்லப்படவில்லை என்றும், தரப்பினர்களுக்குள் தொடர்ச்சி எதுவும் கிடையாது என்றும், பிரிவினை செய்யக்கூடிய வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை இந்த வழக்கில் ஏ பட்டிகை சொத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லியுள்ள ஏ பட்டிகை சொத்து எனது தந்தைக்கு குடும்ப பாகத்தில் கிடைத்த சொத்தாகும்.

5. மேற்படி ஏ பட்டிகை சொத்து வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா பி பட்டிகை சொத்து எனது தந்தை எனக்கு எழுதி கொடுத்த சொத்தாகும். தாவா ஏ பட்டிகை சொத்து 2006 ம்

ஆண்டு எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தாகும். தாவா பி பட்டிகை சொத்தானது எனது தந்தை, எனது தம்பி, எனது சகோதரி ஆகியோர் பெயரில் உள்ள சொத்தாகும். தாவா ஏ பட்டிகை 1வது அயிட்ட சொத்து என்பது உடுமலைபேட்டை, விநாயகர் கோவில் சந்து, கதவு எண்.19 ல் உள்ள சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது தகப்பனார் பெயருக்கு நான் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுத்துவிட்டேன். தாவா ஏ பட்டிகை 2வது அயிட்ட சொத்து நேரு வீதி வீடு என் கைவசம் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா ஏ பட்டிகை 3வது அயிட்ட சொத்து 2006 ம் ஆண்டு பாகபிரிவினையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடை கட்டிடம் என்றால் சரிதான். தாவா ஏ பட்டிகை 4வது அயிட்ட சொத்து சின்னவீரம்பட்டி கிராமம், க.ச.357/2 ல் உள்ள 2.87 ஏக்கர் மனையிடமாக அமைக்கப்பட்ட பூமி என்றால் சரிதான்.

6. மேற்படி மனையிடங்கள் 1 முதல் 29 மனை எண்கள் என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். 2006 ம் ஆண்டு நடைபெற்ற பாகபிரிவினையில் எனது ஒதுக்கப்பட்ட 12 முதல் 18 வரையிலான 7 மனைகளை நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மேற்படி பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட மனையிடங்களை அவர்கள் விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா ஏ பட்டிகை 5வது அயிட்ட சொத்து க.ச.164 ல் உள்ள 5.44 ஏக்கர் பூமி என்றால் சரிதான். மேற்படி சொத்தை பொறுத்து நான், எனது தகப்பனார், 1 முதல் 4 பிரதிவாதிகள்

ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 25.07.1997 அன்று ஒரு சென்னகேசவன் என்வருக்கு விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரிதான். தாவா ஏ பட்டிகை 6 வது அயிட்டசொத்து பெரியகோட்டை கிராமம் க.ச.48 பு.ஏ.1.50 2006 ம் ஆண்டு பாகபிரிவினையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. மேற்படி சொத்தை பொறுத்து 3வது பிரதிவாதி எனது தகப்பனாருக்கு 2006 ல் ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 14.12.2007 ல் விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். தாவா ஏ பட்டிகை 7 வது அயிட்ட சொத்து குமரலிங்கம் கிராமம் க.ச.எண்.375 ல் உள்ள 48 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்தை பொறுத்து 1வது பிரதிவாதியான எனது தந்தை நான் பிறப்பதற்கு முன்பே விற்பனை செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, மேற்படி சொத்தை பொறுத்து நான் வில்லங்க சான்று எதுவும் எடுத்து பார்க்கவில்லை. தாவா பி பட்டிகை 8வது அயிட்ட சொத்தை நான், 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஒரு துரைராஜ் என்பவருக்கு 2004 ம் வருடம் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா பி பட்டிகை 9வது அயிட்ட சொத்து உடுமலைபேட்டை, விநாயகர் கோவில் சந்து, கதவு எண். 18 ல் உள்ள வீடு என்றால் சரிதான்.

8. மேற்படி சொத்தை பொறுத்து எனது தகப்பனாரும், எனது தாயாரும் எனது சகோதரி பெயருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் மூலம்

எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சாட்சி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு தெரியும் என்று கூறுகிறார். தாவா பி பட்டிகை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை பொறுத்து 2006 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா பி பட்டிகை சொத்துக்களை பொறுத்து எனது அத்தை கௌசல்யா என்பவருக்கு ஆயுள் பாத்தியம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆயுள் பாத்திய உரிமையை எனது அத்தை கௌசல்யா இரண்டு விடுதலை பத்திர ஆவணங்கள் மூலம் எனது தந்தை பெயருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தான் பொள்ளாச்சி மெயின் ரோட்டில் உள்ள வீட்டை நாங்கள் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான்.

9. 2006 ம் ஆண்டு பாகபிரிவினை ஆவணம் எழுதும் போது அதிலுள்ள விவரங்களை நான் தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி ஆவணம் பதிவு செய்யும் போது பதிவாளரிடம் ஆவண விவரங்கள் தெரியவில்லை என்று நான் கையெழுத்திட மறுக்கவில்லை. நான் MBA படித்துள்ளதாலும், எனது மனைவி அரசு வழக்கறிஞர் என்பதாலும், 2006 ம் ஆண்டு பாகபிரிவினை ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரியாமல் படித்து பார்க்காமல் கையெழுத்திட்டேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் படிக்காமல் பாகபிரிவினை ஆவணத்தில் கையெழுத்து போட்டேன் என்ற விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை. எனது அத்தையிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கும் போது எனது தந்தையார், வியாபாரத்தின் மூலம் கிடைத்த

வருமானத்தை கொண்டு வாங்கியதாக எனது தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை.

10. பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் வைத்துள்ளார்கள் என்பதை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். என்னுடைய மற்றும் 2வது பிரதிவாதியின் படிப்பிற்காக எனது தந்தை கடன் வாங்கியிருந்தார் என்றும், அதனை தீர்ப்பதற்காக சொத்துக்களை கிரையம் கொடுத்ததாகவும், மேற்படி கிரைய தொகையில் எனக்கு எதுவும் கிடைக்கவில்லை என்றும், அதை சரிகட்டவும், பின்னாளில் கூடுதல் பாகம் கொடுப்பதாக எனது தந்தை ஒப்புக்கொண்டதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி ராஜேஷ் 12ம் வகுப்பில் மாநில அளவில் ரேங்க் எடுத்திருந்தார் என்றால் சரிதான். எனவே 2வது பிரதிவாதிக்கு எனது தந்தை படிக்க வைப்பதற்கு செலவு செய்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2வது பிரதிவாதி மேல்படிப்பிற்காக லண்டன் செல்லும் போது செலவிற்காக கத்தோலிக் சிரியன் வங்கியில் கடன் அவர் பெயரில் வாங்கியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார்.

11. நான் எனது BBM படிப்பை Management கோட்டாவில் தான் சேர்ந்து படித்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். எனது தந்தை 2வது பிரதிவாதியின் படிப்பிற்காக எவ்வித கடனும் வாங்கவில்லை, எனது படிப்பிற்காக தான் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா பி பட்டிகை சொத்தை பொறுத்து எனது தந்தையார் அவருக்கு

சொந்தமான வருமானத்திலிருந்து எனது அத்தையிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கியுள்ளதால் மேற்படி சொத்தை பொறுத்து எனது தந்தை எனது தாயாருக்கும், எனது சகோதர சகோதரிக்கும் எழுதி வைத்த செட்டில் மெண்ட் ஆவணத்தை பொறுத்து நான் ஆட்சேபனை தெரிவிக்கமுடியாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை உரியகாலத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12. நான் இந்த வழக்கை 20.12.2018 ல் தாக்கல் செய்துள்ளேன் என்றும், வா.சா.ஆ.1 பாகபிரிவினை ஆவணம் 27.01.2006 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அப்போது உறுதி கொடுத்ததாக சொல்லப்படும் உரிமையை பொறுத்து தற்போது உரிமை கோரி 12 ஆண்டுகளுக்கு பிறகு வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. 3 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கை நான் தாக்கல் செய்யாததால் காலவரையரை சட்டத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.16 15:20:23 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.